செய்தி வெளியீடு எண்.59/2018 நாள் 15.10.2018

## சென்னை குடிநீர் வாரியம் சென்னையில் உள்ள வணிக கட்டிடங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல்

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் 03.10.2018 அன்று சட்டவிரோதமான முறையில் நிலத்தடி நீர் உறிஞ்சுதலை தடை செய்து மற்றும் வணிக பயன்பாட்டிற்கு நிலத்தடி நீரை உறிஞ்சுதலை முறைபடுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததை ஒட்டி தனியார் லாரி உரிமையாளர்கள் 15.10.2018 முதல் வேலை நிறுத்தத்தை அறிவித்தார்கள்.

இதை தொடர்ந்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் இன்று சென்னை குடிநீர் வாரிய கூடுதல் தலைமை செயலாளர் / மேலாண்மை இயக்குர் மற்றும் சென்னைக் குடிநீர் வாரிய அலுவலர்களுடன் ஒரு அவசர ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் லாரி வேலை நிறுத்தத்தை ஒட்டி பாதிப்புக்கு உள்ளன மருத்துவ மனைகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களில் இருக்கும் வீடுகளுக்கு உடனடியாக தண்ணீர் வழங்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

அதன்படி சென்னை குடிநீர் வாரியம் மேற்கண்ட பாதிப்புக்குள்ளான நுகர்வோர்கள் தங்களது லாரிகள் அல்லது அவர்களால் அங்கிகாரம் பெற்ற லாரிகளுக்கு சென்னை குடிநீர் வாரிய லாரி நீர் நிரப்பு நிலையங்களிலிருந்து இரவு 10 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை குடிநீர் வழங்க விரிவான திட்டம் தயாரித்தது.

இந்த வசதியை பெற பாதிப்பிற்கு உள்ளான நுகர்வோர்கள் சென்னை குடிநீர் வாரியத்திற்கு முறையான விண்ணப்பத்துடன் குறைந்தபட்சம் ஒரு வார காலத்திற்கு தேவையான குடிநீர் கட்டணத்தை முன்னரே செலுத்தி, நாளொன்றுக்கு அதிகபட்சமாக ஒரு லாரிக்கு இரண்டு நடைகள் வீதம் பெற்று கொள்ளலாம்.

இவர்களின் கூடுதல் குடிநீர் தேவை இருப்பின், முறையாக பரிசீலித்து பின்னர் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்